https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கணினியில் தமிழ் வலைப்பூக்கள்

**கு. நிவேதா**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி - 620 018. பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது

**முனைவர் ப. சசிரேகா**
உதவிப்பேராசிரியர், ஆய்வு நெறியாளர்
தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி-620 018

*முன்னுரை*

*தனது உணர்வுகளை கருத்துப் பரிமாற்றமாக வெளிப்படுத்த அடிப்படைக் காரணியாக விளங்குவது மொழி ஆகும். பிறந்து சிறந்த மொழிகளுக்கிடையில் சிறந்தே பிறந்த நமது தமிழ் மொழியானது இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாக வளர்ந்து வந்தது. தொழில்நுட்படங்கள் நிறைந்த இன்றைய காலச்சூழலில் நான்காவது தமிழாக அறிவியல் தமிழ் வளர்ந்து வருகிறது. அறிவியல் தமிழில் குறிப்பாக கணினித்தமிழ் நமது இலக்கண, இலக்கியங்களை கணினியில் உட்புகுத்தி உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுகிறது. சங்கத்தமிழில் ஐந்திணைகள் சிறப்புப் பெற்று விளங்கியது எனில், கணினித் தமிழில் இணையம் ஆறாம் திணையாக பொலிவுற்று இணையத்தமிழ் என்று தனிப்பிரிவாகக் கருதப்படும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது எனில் அது மிகையாகாது. இணைய வளர்ச்சியில் இணைய இதழ்கள், நூல்கள், கல்வி போன்றவை சிறப்புப் பெற்று விளங்கினாலும் வலைப்பூக்கள் இணையத்தில் குறிப்பிடத்தகுந்த வகையில் உன்னத நிலையை எட்டியுள்ளது. அவ்வகையில் வலைப்பூவின் தோற்றம், பண்புகள், வகைகள், வளர்ச்சி நிலைகள், சிறப்புகள், பயன்கள், வலைப்பதிவர்கள், வலைப்பதிவின் உள்ளடக்கம், வலைப்பூ உருவாக்கம், வலைப்பதிவுத் திரட்டிகள், வலைப்பதிவில் கருத்துக்களை எவ்வாறு பதிவு செய்யலாம்? போன்ற வலைப்பூக்கள் சார்ந்த செய்திகள் மற்றும் செயல்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.*

*இயந்திரமாக்கப்பட்ட இன்றைய மனித வாழ்க்கையில் கணினியின் செயல்பாடு மிகுந்த ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. மனிதன் அன்றாட வாழ்வில் பேருந்து பயணச்சீட்டு வாங்குவது தொடங்கி ஒவ்வொரு நிகழ்வுகளிலும் கணினி, திறன்பேசிகளின் பங்கு குறிப்பிடத்தகுந்ததாக அமைகின்றது. கணினி, திறன்பேசிகளில் நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியின் பயன்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. கணினித்தமிழ் பிரிவுகளில் தமிழ் மின்னூல்கள், தமிழ் மின்னூலகங்கள் தமிழ் இணையக் கல்விக் கழகம் என பல்வேறு படிநிலைகளில் கணினியில் தமிழ்மொழி வளர்ச்சியடைந்தது வருகின்றது. அவ்வகையில் வலைப்பூக்களில்(Web blog) தமிழ்மொழியின் செல்வாக்கு, பயன்பாடுகள், இலக்கியம் சார்ந்த் வலைப்பூக்கள், சினிமா, அரசியல், விளையாட்டு என பல்சுவை சார்ந்த வலைப்பூக்களில் தமிழ் மொழியின் வலைப்பதிவுத் திரட்டிகள் போன்றவற்றைப் பின்வரும் பகுதிகள் தெளிவுப்படுத்தும் விதமாக அமைகின்றது.*

### கருச்சொற்கள்

கணினி, இணையம், வலைத்தளம், வலைப்பூ, வலைப்பூ உள்ளடக்கம், வலைப்பதிவுத் திரட்டிகள்

### வலைப்பூக்கள் (Web blog)

*21ஆம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாத பங்களிப்பைச் செய்து வரும் அறிவியலின் ஒரு படிநிலையே இணையம் ஆகும். இலக்கிய வளர்ச்சியில் மட்டுமின்றி அனைத்துத் துறைகளிலும் இணையம் தனது செல்வாக்கை நிலை நிறுத்தியுள்ளது. அறிவியல் தொழில் – நுட்பங்களில் பல்வேறு தொழில் நுட்பங் களும் மக்களைத் தன்வயப்படுத்தினாலும் அவை காலம் கடநது நிற்பதில்லை. சில தொழில் நுட்பங்களே காலத்தை வென்று நிலைத்து நிற்கின்றது. அவற்றில் ஒன்று வலைப்பூ (Web blog) ஆகும்.*

*ஒரு இணையப்பக்கத்தை வெற்றிகரமாக நடத்தவும், அப்பக்கத்தில் செய்திகளை நாம் நினைக்கும் நேரத்தில் வலையேற்றம் செய்யவும், வலையில் ஏற்றிய செய்திகளை உடனடியாகத் திரையில் காணவும், அவற்றில் ஏற்படும் பிழைகளைப் பின்னூட்டம் எனும் நிலையில் பிரதிபலிப்புகளைப் பெறவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அமைப்பே வலைப்பூ ஆகும்.*

*வலைப்பக்கத்தில் ஒரு செய்தியை வலையேற்றி விட்டால் அச்செய்தி நிரந்தரமாகச் சேமிக்கப்படும். தேவைப்படும் சூழலில் அச்செய்தியை எந்த நாட்டில் இருப்பவரும் காணலாம். அச்செய்திகளை சொல், தொடர், தலைப்பு வாரியாக தேடிப் பெற முடியும். வலைப்பூவில் சேமித்து வைத்துள்ள செய்திகள் என்றும் அழியாமல் பாதுகாக்கப்படும். வலைப்பூ இன்றையக் காலக்கட்டத்தில் புதிய இலக்கிய வகையாக செயல்பட்டு வருகிறது என்றே கூறும் அளவிற்கு இதன் பயன்பாடு உலக மக்களுக்கு பல வசதிகளை அளிப்பதால் இதனை வலைப்பூ இலக்கிய வகை என்றே குறிப்பிடலாம். (இணையத்தில் தமிழ் வலைப்பூக்கள், ப,10)*

### வலைப்பூ வரலாறு

*தனி நபரால் தகவல் தொடர்பிற்காக எழுத்துக்கள், ஒலி, ஒளி வடிவில் அமைந்த கோப்புகள், படங்கள் போன்றவைற்றை இணையம் வழியாக உலக மக்களுக்கு தெரிவிக்கும் வலைப்பூ (Webblog) அமெரிக்கர் களால் உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டது.*

*ஜான்பர்கர் (John Barger) என்பவர் 1997இல் Weblog எனும் பெயரில் வலைப்பதிவைத் தொடங்கினார். வெப்பிளாக் (Weblog) எனும் சொல்லின் குறுகிய வடிவமாக blog எனும் சொல் பீட்டர் மெர்கோஸ் (Peter Merholz) என்பரால் ஏப்ரல் 1999ல் பயன்படுத்தப் பட்டது. இவரது வலைப்பூவின் முகப்புப் பக்கத்தில் weblog எனும் சொல் blog என்று குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது. 1994ஆம் ஆண்டு முதல் தனது தனிப்பட்ட வலைப் பதிவை எழுதி வெளியிடும் சஸ்டின் ஹால் (Justi Hall) என்பவர் வலைப்பதிவின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப் படுகின்றார். (ஊடகவியல் பக் 146).*

*1996ஆம் ஆண்டு எக்ஸான்யா (Xanya) எனும் வலைத்தளம் வலைப்பதிவுச் சேவையை வழங்கியது. 1997இல் சுமார் 100 நாட்குறிப் பேடுகள் இத்தளத்தில் இடம்பெற்றது. 2005ம் ஆண்டு டிசம்பர் மாதம் இதன் எண்ணிகை 50,000ஆக அதிகரித்தது. இதன் பின்னர் பல நிறுவனங்கள் வலைப்பூ வெளியீட்டிற்கான பல சேவைகளை வழங்கியது. அவற்றுள் blogger.com எனும் வலைப்பதிவு வெளியீட்டில் குறிப்பிடத்தகுந்த வகையில் அமைந்தது. இத்தளம் 2003ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் Google நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. Bolgger, wordpress போன்ற நிறுவனங்கள் வலைப்பூ சேவையை இலவசமாக வழங்குவதோடு மட்டுமல்லாமல் வலைப்பூ (Bolg), இணையதளமாக (website) மாற்றுவதற்கும் வசதிகளை வழங்குகின்றன.*

*பிளாக்கர் (https://www.blogger.com), வேர்டுபிரஸ் (https://ta.wordpress.com), தம்ளர் (https://www.tumbler.com), பிளாக்சம்(https:// www.blogsoem.com), டைப்பேட் (http:// www.typepad.com), லைப்ஜர்னல் (http:// www.livejournal.com), பிளாக்ஆர் (https:// blogr.org/), ஜங்கா (https://xanga.com/) போன்ற இணைய தளங்கள் முலம் இலவசமாக வலைப்பதிவுகளை உருவாக்கிக் கொள்ளும் வசதிகளை வழங்குகின்றன. (தமிழ் மின் உள்ளடக்கங்கள், ப,31)*

### வலைப்பூ உருவாக்கம்

இலக்கியம், அரசியல், தொழில்நுட்பம் போன்ற பல்வேறு நிலைக்கலனை அடிப் படையாகக் கொண்டு உருவாக்கப்படும் வலைப்பூவை கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பயன்படுத்தி உருவாக்கிக் கொள்ளலாம்.

வலைப்பூவை உருவாக்க இணைய உலாவியின் மேல்பட்டையில் www.blogger.com என உள்ளீடு செய்ய வேண்டும். பிறகு அதில் உள்ள create your blog எனும் வசதியைப் பயன்படுத்தி நமது

மின்னஞ்சல் முகவரியைப் பதிவிட வேண்டும். அடுத்த நிலையில் கடவுச்சொல் (password) பதிவிட்டு நாம் உருவாக்கும் வலைப்பூவிற்கு தலைப்பினைக் கொடுக்க வேண்டும். அதன் பின்னர் நமது வலைப்பூவிற்குரிய முகவரி எனும் பகுதியில் நமக்கு விருப்பமான பெயரினை உள்ளிட்டு URL முகவரியைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும். Next எனும் வசதியைப் பயன்படுத்தி அடுத்தப் பக்கத்தில் நம்மால் உருவாக்கப்படும் வலைப்பூ வாசகர்களுக்கு எந்த பெயரில் பிரதிபலிக்க வேண்டும் என்ற வினா எழும் பக்கத்தில் நம் வலைப்பூவின் (Theme) மையக் கருதை அடியொற்றி பெயரிட்டு Finish எனும் பொத்தானைச் சுட்டினால் வெற்றிகரமாக நமக்கான வலைப்பூ உருவாக்கப்பட்டுவிடும். வலைப் பதிவு உருவாக்கத்தின் பொழுது கீழ்க்கண்ட இரு செயல்பாடுகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வலைப்பூவின் தலைப்பை எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ள முடியும், வலைப்பூவிற்கு நாம் விரும்பும் பெயரை முன்பே மற்றொரு நபரால் பயன்படுத்தப்பட்டு வருகிறதா? என்பதை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வேறு நபர்களால் பயன்படுத்தப்பட்டால் அப்பெயருடன் சில எழுத்துக்கள் அல்லது ஆண்டு போன்ற பிற விவரங்களையோ சேர்த்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## வலைப்பதிவின் உள்ளடக்கங்கள் (Blog contents)

வலைப்பதிவின் உள்ளடக்கங்கள் ஒவ்வொரு வலைப்பதிவர்களைப் பொறுத்து மாறுபடு கின்றன. வலைப்பதிவர்கள் எவ்வித செய்தி களை வெளிப்படுத்த வேண்டும் என எண்ணுகிறார்களோ அதனைப் பொறுத்து வலைப்பதிவின் உள்ளடக்கங்கள் மாறுகின் றன. எனினும் ஒரு வலைப்பதிவானது,

வலைப்பதிவின் தலைப்பு (Blog Title)

வலைப்பதிவு முகவரி (Blog Address)

களப்பெயர் (Domain Address)

பதிவு அல்லது உள்ளடக்கம்

மறுமொழிகள் (Comments)

விவரிப்பு அல்லது ஸ்லோகம்

இடுகைகளுக்கான தனிப்பக்கங்கள்

சேமிப்பகம் (Archive)

தொடுப்புகள் (Links)

போன்ற பொதுவான உள்ளடக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

## வலைப்பதிவுத் திரட்டிகள் (Collections of Blog)

வலைப்பூக்களைத் தொடங்குவதும், வலைப் பூக்களில் செய்திகளைப் பதிவிடுவதும எளிமையான செயல் எனினும் வாசகர்கள் மத்தியில் அப்பதிவைக் கொண்டு சேர்ப்பதும் சவால் நிறைந்த பணியாகும். முகநூல் (facebook), புலனம் (Whatsapp) போன்ற சமுக வலைத்தளங்களின் ஆதிக்கம் ஆகியவற்றால் வலைப்பதிவுச் செய்திகளை வாசகர்களிடத் தில் கொண்டு சேர்ப்பது கடினமான பணியாக அமைந்த பொழுதும் வலைப் பதிவுத் திரட்டிகள் அப்பணியைச் சுலபமாக மாற்றியுள்ளன.

வலைப்பூக்கள் உருவாகிய தொடக்க காலத்தில் இருந்த குறைந்த அளவிலான வலைப்பூக்களை ஒன்று திரட்டி மதி கந்தசாமி என்பவர் 2003ஆம் ஆண்டு ஜீன் மாதம் வெளியிட்டார். மதி கந்தசாமி அவர்களின் இச்செயல்பாடு வலைப்பதிவுத் திரட்டிகள் தோன்றுவதற்கு அடித்தளமாக அமைந்தது.

*வலைப்பூக்களைப் பற்றிய பதிவுத் தகவல்களை இணைய நண்பன் எனும் தளம் வழங்குகிறது. இத்தளத்தில் வலைப்பதிவர் களின் தன் விபரக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. திரு. காசி ஆறுமுகம் அவர் களால் உருவாக்கப்பட்ட தமிழ் மணம் வலைப்பதிவுத் திரட்டியில் பல்வேறு வலைப் பதிவர்களின் விவரங்கள் மற்றும் தலைப்பு கள் இடம் பெற்றுள்ளன. அமெரிக்கா விலுள்ள தமிழ் மீடியா இண்டர்நேஷனல் நிறுவனத்தின் பொறுப்பில் இவ்வலைப் பதிவுத் திரட்டி செயல்படுகிறது. தேன்கூடு, வேர்டுபிரஷ், டெனோரதி, சங்கமம், மாற்று, திரட்டி, தமிழ்வெளி, தமிழிஷ் போன்ற வலைப்பதிவுத் திரட்டிகள் வலைப்பதிவு களைத் திரட்டித் தரும் வகையில் செயல்படுகின்றன. (தமிழும் கணினியும்,ப,179)*

## தமிழ் வலைப்பூக்கள்

இணையம் தோன்றிய தொடக்க காலத்தில் எழுத்துருச் சிக்கல்கள் தோன்றிய காரணங் களால் இணையம் பயன்படுத்துபவர்களின் எண்ணிகை குறைவாகக் காணப்பட்டது. ஒருங்குறி (Unicode) முறை பயன்பாட்டிற்கு வந்த பின்பு இணையம் அதிக அளவிலான மக்களால் பயன்படுத்தப்பட்டது. இதைப் போன்று எழுத்துருச் சிக்கல்கள் தமிழ் வலைப்பூக்களைத் திரையில் எவ்வாறு காண்பது? போன்ற பல சிக்கல்களால் தமிழ் வலைப்பூக்களைப் பயன்படுத்தும் வாசகர் களின் எண்ணிகை குறைவாகக் காணப்

பட்டது. இச்சிக்கல்களை நீக்கி அதிக அளவிலான மக்களால் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ் மொழியில் பல்வேறு வலைப்பூக்கள் மற்றும் வலைப்பதிவுகள் தொடங்கப்பட்டது.

தமிழின் முதல் வலைப்பூவை உருவாக்கியவர் கார்த்திகேயன் இராமசாமி என்பவராவார். இவர் தனது முதல் வலைப்பதிவை 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாளன்று வெளியிட்டுள்ளார். இரண்டாவதாக தமிழ் வலைப்பதிவை வெளியிட்டவர் கன்னியா குமரியைச் சார்ந்த நவன் என்னும் நவநீத கிருஷ்ணன் ஆவார். இவர் தனது வலைப் பதிவை 2003ஆம் ஆண்டு ஜனவரி 26இல் வெளியிட்டார். வலைப்பதிவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக ஆகஸ்ட் மாதம் 31ஆம் நாள் உலக வலைப்பதிவர்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. (தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், ப.153)

தமிழ் வலைப்பூளை உருவாக்குதல் மற்றும் அதன் வளர்ச்சி நிலைகளில் பேராசிரியர் கள், பொறியாளர்கள், தமிழ் மீது பற்று கொண்ட தமிழ் ஆர்வலர்கள், அயல்நாட்டுத் தமிழர்கள் போன்றோர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தகுந்ததாக அமைகிறது. பேராசியர் கள் முனைவர் க. துரையரசன், முனைவர் மு.பழனியப்பன், முனைவர் செ. கல்பனா, முனைவர் மு. இளங்கோவன், பி. சரவணன், சுப.நற்குணன், முனைவர் நா. இளங்கோ, முனைவர் தி. நெடுஞ்செழியன், முனைவர் துரை.மணிகண்டன் போன்றோர்களும், தமிழ் ஆர்வலர்களான திரு. தமிழ்த்தேனி, திரு.ஆண்டோ பீட்டர், நெல்லைக் கண்ணன், நாளயினி, தமிழ்நதி, இராஜகோ பாலன், அயல்நாட்டுத் தமிழ் அறிஞர்களான அ.முத்துலிங்கம், ஆல்பர்ட் ராம்பிரசாத், ரஞ்சனி, வேதா போன்றோர்களின் பங்களிப் பும் தமிழ் வலைப்பூக்களின் வளர்ச்சியில் குறிப்பிடத்தகுந்த வகையில் அமைகின்றது. (முனைவர் துரை. மணிகண்டன், இணையத் தில் தமிழ் வலைப்பூக்கள்,ப.63).

தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள் மட்டுமின்றி பொறியாளர்களான முனைவர் ந.கண்ணன், சுபாஷினி, திரு. அண்ணா கண்ணன், சா.கலைப்புனிதன், பா.ஜெய மோகன், கல்யாண் குமார், லாஸ் ஏஞ்சல்ஸ் ராம், வாசு. அரங்கநாதன் போன்றோர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தகுந்த வண்ணம் அமைகின்றது. (முனைவர் துரை.மணி கண்டன் & த.வானதி, தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், ப.159).

## தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்

தமிழ்மொழியில் உருவாகிய வலைப்பூக்கள் பின்வரும் காரணங்களால் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

வலைப்பூக்களின் வருகை முலம் தமிழ் இலக்கியங்கள் பற்றி வெளியுலக மக்கள் அறிந்து கொள்ள முடிகிறது.

இணையத்தில் (வலைப்பூவில்) தமிழ் மொழியில் எழுதும் எழுத்தாளர்களின் எண்ணிகை அதிகரித்துள்ளதால் இணையத் தில் தமிழ்மொழி வளர்ச்சியடைந்துள்ளது.

வலைப்பூக்களால் உலக நாடுகள் பல பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் கருத்துக்கள் மிக விரைவாகக் கிடைக்கிறது.

தமிழ்மொழி சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் வலைப்பூக்களில் அதிக அளவில் வெளி வருகின்றது.

வலைப்பூக்கள் முலம் தொழில்நுட்ப வளர்ச்சிப் பெற்று தமிழ்மொழி வளர்ந்து வருகின்றது.

## தமிழ் வலைப்பூக்களின் வகைகள்

வலைப்பதிவுகளை நிர்வாக அடிப்படையில்,

தனிநபர் வலைப்பதிவு, குழு வலைப்பதிவு என இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தப் படுகின்றது. தனிநபர் வலைப்பதிவு என்பது தனி நபரால் நிர்வாகிக்கப்படுவதாகும். ஆசிரியர், நிர்வாகி ஆகிய இருவரும் ஒருவராகவே செயல்படுவார்.

குழு வலைப்பதிவு என்பது பலர் சேர்ந்து ஒரே வலைப்பதிவில் எழுதும் முறையாகும். குடீவாக வலைப்பதிவில் எழுத விரும்புபவர் பிளாக்கர் அமைப்பு (Settings) பகுதிக்குச் சென்று நிர்வாகி என்ற இடத்தில் ஆசிரியரைச் சேர்க்க விரும்புவோரின் மின்னஞ்சல் முகவரியைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால் மின்னஞ்சல் முகவரி கொடுக்கப்பட்ட நபரின் மின்னஞ்சல் முகவரிக்கு அழைப்பு அஞ்சல் செல்லும். அந்த நபர் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளும் சூழலில் அவரும் வலைப்பதிவில் எழுதும் வசதியைப் பெறுவார். கூடுதல் வசதியாக நிர்வாகி விரும்பினால் அவரையும் நிர்வாகியாக மாற்றலாம். ஆசிரியர் எனும் பிரிவில் பதிவுகளை மட்டுமே எழுத முடியும். ஆனால் நிர்வாகி எனும் பிரிவில் பதிவுகளை எழுதுவதோடு மட்டுமின்றி வலைப்பதிவின் அமைப்புகளிலும் விரும்பிய திருத்தங்களை செய்யலாம்.

பொருள் அடிப்படையில் வலைப்பதிவுகளை இலக்கியம், வரலாறு, பொது அறிவு, மருத்துவம், தொழில்நுட்பம், அறிவியல்,

பக்தி, நகைச்சுவை, அரசியல், புனைவுகள், சினிமா, சமையல் என பல்வேறு வகைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

### இலக்கியம் சார்ந்த வலைப்பூக்கள்

இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான மக்களின் வாழ்வியல் செயல்பாடுகளை நமது இலக்கியங்கள் வழியாக அறிய முடிகின்றது. இவ்வாறு வாழ்வியல் விழுமியங் களை வெளிப்படுத்தும் இலக்கியங்களை இணையம் வழியாக ஒரு நொடிப்பொழுதில் அறிந்து கொள்ள முடிகிறது.

**சென்றிடுவீர் எட்டுத்திக்கும்**
**கலைச்செல்வங்கள்**
**யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்**
*(பாரதியார் கவிதைகள்,ப.44)*

எனும் பாரதியின் கூற்றிற்கு ஏற்ப எட்டுத் திசைகளிலும் உள்ள இலக்கியங்கள் அனைத்தும் வலைப்பதிவுகள் முலம் நமக்குக் கிடைக்கின்றன. இலக்கியம் சார்ந்த வலைப் பூக்களிலுள்ள வலைப்பதிவுகள் பெரும்பாலும் தமிழகத்திலுள்ள வலைப்பதிவர்களை விட அயல்நாடுகளில் வாழும் தமிழ் ஆர்வலர் களால் பதிவிடப்பட்டதாக அமைந்துள்ளது.

*கவினுலகம் (www.emadal.blogpsot.com), ராகினியின் கவிதைகள்(www.rahini. blog-spot.com), சுவடுகள் (www.suvatukal.blogs pot.com), சில சிறுகதைகள்(vizisirukathai. blogspot.com), தேடற்சரம் (thedatsaram. blogspot.com), திருத்தமிழ்(thirutamil. blog—spot.com), காலக்கிறுக்கன்(josaph. blog—spot.com), அறிவுமதி(arivumathi.blogspot.com), பதிவுகள், வேர்களைத்தேடி(gunathamizh. blogspot.com) போன்ற இலக்கியம் சார்ந்த வலைப்பூக்களில் கவிதை, சிறுகதைகள், இலக்கியம் சார்ந்த சிறு துணுக்குச் செய்திகள் இடம்பெற்று பல்வேறு வலைப் பதிவர்களால் வெளியிடப்படுகிறது. (இணையத்தில் தமிழ் வலைப்பூக்கள்,ப.17).*

### தமிழ் வலைப்பதிவின் நன்மைகள்

வலைப்பதிவு இலவசச் சேவையாகக் கிடைப்பதால் பல்வேறு நபர்கள் வலைப்பதிவை உருவாக்கி தமிழில் எழுதி வருகின்றனர். முகநூல், புலனம் முலம் உள்ளிடப்பட்ட கருத்துக்கள் அவர்களின் நண்பர்கள் வட்டத்திற்கு மட்டுமே சென்றடையும். ஆனால் வலைப் பதிவில் வெளியிடப்படும் கருத்துக்கள் தேடு பொறிகளால் பரிந்துரைக்கப்படும் என்பதால் வலைப்பதிவு காலத்தை வென்ற தொழில் நுட்பமாக பயன்படுத்தப்படடு வருகிறது.

வலைப்பதிவில் தமிழ் இன்று எழுத்து வடிவிலும், காணொளி மற்றும் ஒலிநூல், மின்னூல் வடிவங்களில் அதிகமாகப் பகிரப் பட்டு வருகிறது. இளம் எழுத்தாளர்கள் பலர் வலைப்பதிவில் எழுதிய பதிவுகளை நூலாக வெளியிட்டு வருகின்றனர். வலைப்பூவில் உள்ள பதிவுளை நூலாக வெளியிடுவது மட்டுமின்றி மின்னூலாகவும் வெளியிட்டு வருகின்றனர். தனிநபரின் சிந்தனைகளைப் பொருட்செலவு இல்லாமல் இணையத்தில் வெளியிட இவ்வலைப்பூ பயன்படுகிறது.

வலைப்பூ இலக்கியம் மற்ற இலக்கிய வகை போன்று அமையாமல் உடனடியாக அனைவராலும் பார்வையிடப்படுகின்றது. நடுநிலையுடனும், நம்பகத் தன்மையுடனும் செயல்படும் இணைய ஊடகமாக வலைப்பூ செயல்படுகிறது. நம் பதிவுகளை வலைப் பூவில் பதிவிட்டவுடன் உலகிலுள்ள பார்வை யாளர்கள் உடனடியாகப் பார்த்து பின்னூ ட்டத்தின் வழியாக நன்மை, தீமைகளைக் குறிப்பிடுவதால் தரமான கருத்துக்கள் மட்டுமே வலைப்பூக்களில் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

### முடிவுரை

தொழில்நுட்ப வளர்ச்சியினால் சமுக ஊடக ங்களில் ஒன்றாகத் திகழும் வலைப்பூக்கள், வலைப்பூவின் வரலாறு, வலைப்பதிவை உருவாக்குதல், வலைப்பதிவின் உள்ளடக்கங் கள், வலைப்பதிவின் நன்மைகள், நிர்வாகம் மற்றும் பொருள் அடிப்படையிலான வலைப் பூக்களின் வகைகள், தமிழ் வலைப்பூக்கள், தமிழ் வலைபூவின் நன்மைகள், இலக்கியம் சார்ந்த வலைப்பூக்கள், அரசியல், தொழில் நுட்பம், பல்சுவை சார்ந்த வலைப்பூக்கள் மற்றும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு வலைப் பூக்களின் பங்களிப்பு போன்ற பல்வேறு செய்திகளை இக்கட்டுரை வெளிப்படுத்தி நிற்கின்றது.

### துணைநூற் பட்டியல்

1. முனைவர் துரை.மணிகண்டன், (2010), இணையத்தில் தமிழ் வலைப்பூக்கள், தஞ்சாவூர், கமலினி பதிப்பகம்.
2. முனைவர் துரை.மணிகண்டன், (2021) ஊடகவியல், தஞ்சாவூர், கமலினி பதிப்பகம்.
3. முனைவர் குணசீலன், இரா. (2023), தமிழ் மின் உள்ளடக்கங்கள், கோயம்புத்தூர், வேர்களைத் தேடி பதிப்பகம்.
4. முனைவர் இராதாசெல்லப்பன், தமிழும் கணினியும், திருச்சிராப்பள்ளி, கவிதை அமுதம் வெளியீடு.
5. முனைவர் துரை.மணிகண்டன், த.வானதி (2021) தமிழ்க்கணினி இணையப்பயன்பாடுகள், தஞ்சாவூர், கமலினி பதிப்பகம்.
6. பாரதியார் கவிதைகள், (2008) சென்னை, திருமகள் நிலையம்.